**தலைப்பு 277 – மொனறாகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மொனறாகலை மாவட்டச் செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராகும். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 277 – மொனறாகலை மாவட்டச் செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 மே 31 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மொனறாகலை மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | 1. | அரச பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு இணக்கமின்மை | 2.3 |
| | | 2. | முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 3. | முகாமைத்துவப் பலவீனங்கள் | 2.9(ஆ) மற்றும் (இ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. காலம் கடந்த வைப்புக்கள் தொடர் பாக நடவடிக்கை எடுக்காமை. | 2.12 |
| | | 2. சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள். | 2.13.1 |
| | | 3. வரித் தேவை களுடன் இணக்க மின்மைகள் | 2.13.2 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமை த்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | 1. நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு இயலாமை<br>2. பிபில பிரதேச செயலகத்தின் அரசாங்க வீடு ஒன்றின் நிலுவை வாடகை அறவீடு செய்யாமை | 2.11<br>2.9(அ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. பூர்த்தி செய்யப்படாத நிர்மாண வேலைகள்<br>2. எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறை வேற்றப்படாத செயற் திட்டங்கள்<br>3. அத்திய அவசியமான வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்படாத நிர்மாண வேலைகள் | 2.7(அ),(உ) மற்றும் (ஒ)<br>2.7ஆ),(ஈ),(ஊ),(எ),(ஏ),(ஐ) மற்றும் (ஓ)<br>2.7(இ) மற்றும் (ஔ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஓ) | மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செலவு ஒன்று அல்லது ஈடுபாட்டு பொறுப்பு ஒன்றாயினும், அல்லது நோக்கெல்லை அல்லது வரையறைகள் அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் உட்படுவதெனவும் மற்றும் அது போதியளவு அதிகாரத்தினால் மேவகை ஆவதாகவும், | நிதி ஏற்பாட்டு எல்லை மிகைத்து பொறுப்பு க்கள் மேற்கொள்ளல் | 2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தான் பொறுப்பு சொல்ல வேண்டிய செலவுத் தலைப்பொன்றில் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங் களுக்காக நிதியாண்டு இறுதி யில் ஒதுக்கீட்டு கணக்கு ஒன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பி க்கப்படுவதாகவும், | கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை களின் செலவுகளை மிகையாகக் காட்டுதல் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஞ) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், குற்றங்கள் அல்லது மோசடிகளின் காரணமாக அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப் பிரமாணங்கள் 103 முதல் 108 வரையான பிரமாணங்களின் விதித்துள்ள செயற்பாட்டு முறைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் கடைபிடிக்கப்படும் எனவும், நிதிப் பிரமாணங்கள் 156(1) பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்/ ஊழியர்கள் மீது மிகைவிதிப்பு விதிக்கப்படுமெனவும், | 1. சேதங்களும் இழப்புக் களும் | 2.8 |
| | | 2. ஒப்பந்த வேலை களுக்காக மிகையாக கொடுப்பனவு செய்தல் | 2.7(க) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான கடமைகள்

(அ) பிரதேச நிருவாக மற்றும் கூட்டிணைப்பு
(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
(இ) ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்
(ஈ) அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரண அலுவல்கள்
(உ) சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள்
(ஊ) அரச வருமானத்தை சேகரித்தல்
(எ) மத மற்றும் பண்பாட்டு அலுவல்கள்

### 2.2 மாவட்ட செயலகத்தில் கீழ் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்

மாவட்ட செயலகத்தின் கீழ் பிபில, மெதகம, மடுள்ள, சியம்பலாண்டுவ, மொனறாகலை, புத்தள, படல்கும்புற, கதிர்காமம், வெல்லவாய, தனமல்வில, செவனகல ஆகிய பிரதேச செயலகங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களினால் மாவட்ட செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள கருமங்கள் பிரதேச மட்டத்தில் நிறைவேற்றப்படுகின்றது.

## 2.3 பெறுகைகள் செயற்பாடுகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

மாவட்ட செயலகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வழங்கல் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகள், வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக கொடுப்பனவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.6 இன் பிரகாரம் பண்டம் ஒன்றினை வழங்களுக்காக 6 மாத காலப்பகுதியில் ஆரம்ப வழங்குனரிடம் கட்டளை இடுவதற்கு முடியுமாக இருந்த போதிலும், அக்காலப்பகுதியை மிகைத்து 2017 ஆண்டின் போது மொனறாகலை மாவட்ட செயலகம் மற்றும் செவனகல பிரதேச செயலகம் ஆகியவற்றினால் கூட்டுத்தொகை ரூபா 568,049 தொகை பெறுமதியான கட்டளைகள் ஆரம்ப வழங்குனருக்கு அனுப்பி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.7.7 இன் பிரகாரம் பிரதேச பெறுகைகள் குழு ஒன்றில் மூன்றாவது அங்கத்தவர் பெறுகைகள் நிறுவனத்திற்கு வெளியே உள்ள ஒருவராக இருக்க வேண்டுமெனினும், மடுள்ள பிரதேச செயலகத்தினால் கூட்டுத்தொகை ரூபா 41.63 மில்லியன் பெறுமதியான 102 பெறுகைகள் தீர்மானங்கள் தொடர்பாக பெறுகைகள் குழுவின் மூன்றாவது உத்தியோகத்தர் ஆக பிரதேச செயலகத்தை சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(இ) கதிர்காமம் இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தின் கட்டிடத்தை திருத்தும் நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டுக் கிரயமம் ரூபா 3.37 மில்லியன் தொகையாக இருந்தது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.2 இன் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையில் விலைகூறல்கள் அழைக்கப்பட்டு பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த நிர்மாணவேலையை இரண்டு கட்டங்கள் என ரூபா 2 மில்லியனுக்கு குறைவாக மதிப்பீட்டை இரண்டு பகுதிகளாகத் தயாரித்து தேசிய போட்டி அடிப்படை விலைகூறல் அழைப்பில் இருந்து விளகி கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் இரண்டு தன்னார்வ அமைப்புக்களுக்கு அந்த ஒப்பந்த வேலையினை வழங்கி ரூபா 2.94 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் பிரதேச பெறுகைகள் குழு ஒன்றிற்கு சந்தை விலை நிர்ணயிக்கும் முறையின் கீழ் ரூபா ஒரு மில்லியனை விட குறைவான பெறுகைகள் மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. அவ் வரையறையினை மிகைத்து வெல்லவாய பிரதேச செயலகத்தின் பிரதேச பெறுகைகள் குழுவினால் ரூபா 1.33 மில்லியன் பெறுமதியான ஒட்டு பழவகை கன்றுகள் சந்தைவிலை நிர்ணயிக்கும் முறையின் கீழ் விலைகூறல் அழைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) மோட்டார் வாகனங்களின் எரிபொருள் எரிதலை பரிசோதனை செய்யாமை

2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் வெல்லவாய, மெதகம, மடுள்ள ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 09 வாகனங்களின் மீளாய்வாண்டின் போது எரிபொருள் எரிதல் மீதான பரிசோதனை செய்திருக்கவில்லை.

### (ஆ) வாகன விபத்துக்கள் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்காமை

2017 ஆண்டின் போது மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த விபத்திற்கு உள்ளாகிய 05 வாகனங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 104(4) இன் பிரகாரம் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.5 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

மாவட்ட செயலகத்தினால் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணக்கமின்றி 06 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் எல்லையை மிகைத்து ரூபா 778,949 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது.

## 2.6 முறைசாராக் கொடுக்கல வாங்கல்கள்

வெல்லவாய பிரதேச செயலகத்தினால் 2017 திசெம்பர் மாதத்தில் கூட்டுத்தொகை ரூபா 1.61 மில்லியன் தொகை பெறுமதியான 14 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்காக நிதிப் பிரமாணம் 139 இன் பிரகாரம் செலவுகளை சான்றுபடுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 ஒப்பந்த வேலை நிருவாகம்

மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தியிருந்த ஒப்பந்த வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் கதிர்காமம் புதிய பிரதேச செயலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 46.33 மில்லியன் தொகைக்கான உடன்படிக்கை பெறுமதிக்கு ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2018 ஏப்ரல் 24 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) கட்டிட நிர்மாண வேலைக்காக ஒப்பந்தக்காரருடன் 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 நவம்பர் 16 திகதி அளவில் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அத்திகதி அளவில் அவ்வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த வேலையின் காலம் அத் திகதி முதல் 2018 மார்ச் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 20 திகதி அளவில் அதற்காக ரூபா

38.68 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 24 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கதிர்காமம் பிரதேசம் மிகவும் உஷ்ணம் கூடிய பிரதேசமாகக் காணப்பட்டமையால் இந்தக் கட்டிடத்தின் கூரைக்கு உஷ்ணத்தை கட்டுப்படுத்துவதற்காக Aluminium Foil மறைப்பு போட வேண்டியிருந்த போதிலும் மதிப்பீடு தயாரிக்கும் போது அத்தேவை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக திறந்த மற்றும் மூடிய குப்பைகளை அடுக்கும் இடமொன்று நிர்மாணித்தல் மற்றும் அரிக்கும் மற்றும் பொதி செய்யும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 5.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஏப்ரல் 20 ஆம் திகதிய ரு/ம/க/தெ/பா/176 இலக்கங் கொண்ட ருஹுணு மஹா கதிர்காம தேவாலயத்தின் நிருவாக செயலாளரினால் மொனறாகலை மாவட்ட செயலாளரை கடிதத்தின் பிரகாரம் இச் செயற்திட்டத்தின் மூலம் கதிர்காமம் புனிய பூமியினை குப்பைகள் இன்றி சுத்தமாக வைத்திருத்தல், நீண்ட காலமாகக் காணப்பட்ட குப்பைகளை குவிப்பதால் ஏற்படும் சுற்றாடல் அழிவினை தடுத்தல், உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையை தேவாலயத்தின் பூந்தோட்டத்திற்கு மற்றும் பசுமை இல்லத்திலுள்ள மரக்கறிகளுக்காக பயன்படுத்துதல் மற்றும் மீதியாகவுள்ளவற்றை பிரதேசத்தின் விவசாயிகளுக்கு வழங்குவது என்பன எதிர்பார்த்த குறிக்கோளாக இருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக முடியாதிருந்தது.

(ii) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக கூட்டுத்ததொகை ரூபா 5.04 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 2016 திசெம்பர் 10 திகதி அளவில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 24 திகதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் பயன்படுத்தப்படாமையால் அழிவடையும் நிலையில் காணப்பட்டது. நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் முறைசாரா விதமாக வெளியே குவிக்கப்படுவதனால் டெங்கு தொல்லைகள் பரவுதல் ஆபத்து ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(iii) நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக மின்சார கம்பி இழுத்தல் செய்யப்பட்டு துணைக்கருவிகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 24 திகதி அளவிலும் மின் இணைப்பு பெற்றிருக்கவில்லை.

(இ) மொனறாகலை பிரதேச செயலகத்தினால் உள்நாட்டு விவகார அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் மொனறாகலை மாவட்டத்திலுள்ள 07 தாய்மார் கிளினிக் நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 42.40 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 07 கிளினிக் நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தவேலை நிறுவனத்துடன் ரூபா 48.64 மில்லியன் தொகைக்கான சிவில் வேலைப் பெறுமதியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரினால் ரூபா 42.40 மில்லியன் இற்கான வேலைப்பகுதிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் மற்றும் ஒப்பந்தவேலை உடன்படிக்கையில் அடங்கியுள்ள Valance Boards தயாரித்தல், Aluminum

foil வழங்கி விரித்தல், Eave gutters வழங்கி பொருத்துதல், Down pipe வழங்கி பொறுத்துதல் மற்றும் Iron grill தயாரித்து பொருத்துதல் என்பனவற்றிற்காக ரூபா 1.97 மில்லியன் இற்கான வேலைப்பகுதிகள் ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றியிருக்கவில்லை. இதன் காரணமாக மதிப்பீடு செய்த முறையில் கட்டிடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியவசியமான வேலைப் பகுதிகளை கைவிட்டு நிர்மாணவேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) கிளினிக் நிலையக் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளில் பேமன்ட் நிர்மாணித்தல், மின்விசிரிகள் பொறுத்துதல் மற்றும் இரண்ட நிலையங்களில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய நிர்மாண வேலைகளுக்கு உரிய அத்தியவசியமான வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. இறதியான சிட்டை தயாரிக்கும் போது மதிப்பீட்டு பெறுமதியை விட முடிவுற்ற வேலைகளின் பெறுமதி குறைந்திருந்ததுடன் அந்தச் சந்தர்ப்பத்திலும் மேலதிக வேலைப்பகுதிகள் என அந்த வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2017 ஆண்டு தெற்கு வலையங்கள் சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 பயிர்செய்கை கிணறு நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக மாவட்ட செயலகத்திற்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலை செவனகல பிரதேச செயலகத்தினால் ரூபா 878,977 தொகை செலவிடப்பட்டிருந்தது. பயிர்செய்கை கிணறு நிர்மாணித்தல் தொடர்பான முன்சாத்தியக்கூறு அறிக்கையின் பிரகாரம் ‘‘விவசாய அலுவல்களுக்குத் தேவையான நீர் வழங்குவதன் மூலம் விவசாயத்தை அபிவிருத்தி செய்தலும் விவசாய குடும்பங்களின் வருமான நிலைமையை அதிகரித்தல்’’ ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் இந்த கிணறு நிர்மாணிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிப் பகுதி சட்டரீதியாக உரித்தாக்கி இருக்காததுடன் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இயலாமையினால் விவசாய கிணறுகளை பயன்படுத்த முடியாமையினால் அவை கடுமையாக அசுத்தமடைந்து காணப்பட்டது அவதானிக்கப்பட்டது.

(உ) செவனகல பிரதேச செயலத்தினால் 2017 ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விஹாரை ஒன்றின் சனசமூக நிலையமொன்றினை நிர்மாணிக்கும் நிர்மாணவேலைக்காக ரூபா 484,963 தொகை செலவிடப்பட்டு பண்டங்கள் கொள்வனவு செய்து தன்னார்வ நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் கட்டிடத்திற்கான தூண்கள் நிர்மாணிப்பதற்காக குழிகள் தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வழங்கியிருந்த பண்டங்களை பயன்படுத்தி கட்டிட நிர்மாண வேலையை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஊ) 2017 ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செவனகல பிரதேச செயலகத்தினால் ரூபா 194,000 தொகை செலவிடப்பட்டு நீரில் அமிழ்த்தக் கூடிய மின்சார நீர் மோட்டார் பம்பு ஒன்று சமூக அடிப்படை அமைப்பு ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 மார்ச் 20 திகதி அளவில் அந்த நீர் மோட்டார் பம்பு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அது நலன்பெறுவோர் ஒருவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

(எ) படல்கும்புர பிரதேச செயலகத்தினால் கரவில எல்ல மேல் பாதைக்கு கிரவல் செய்யும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூபா 248,507 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பாதையை மோட்டார் கிரேடர் செய்து மண்போடப்பட்டு குறிப்பிட்டுள்ளவாறு தயாரித்தலுக்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் பாதையை மோடர் கிரேடர் பண்ணிய பின்னர் மழைபெய்ததன் காரணமாக பாதை சேராகியிருந்தமையால் அந்த சேற்றுடனான மண்ணை அகற்றுவதற்காக அனைத்து பணமும் செலவிடப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட் விடயத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ii) பாதையிலுள்ள சேற்றினை அகற்றுவதற்கு கொடுப்பனவு செய்யும் போது பாதை கூறுவிலை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய ரேட் இனை பயன்படுத்தாமையினால் ரூபா 185,125 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாகக் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆண்டிற்கான கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் தொம்பகஹவெல நீர் வினியோகத் திட்டத்தின் கீழ் குழாய் கிணறு ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டம் சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தியிருந்தது. அந்த நிர்மாண வேலைக்காக பிரதேச செயலகத்தினால் ரூபா 492,565 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நலன்பெறுவோருக்கு நீர் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற விதமாக கைப் பம்புடனான குழாய் கிணற்றின் மேற்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றின் மூலம் நலன்பெறுவோரினால் பயன் ஒன்று பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஐ) பிரதேச மக்களுக்கு குடிநீர் மற்றும் ஏனைய நீர் தேவைகளை வழங்குவதற்காக 2016 ஆண்டின் போது கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கெஹெலஅத்தாவெல சமூக நீர் செயற்திட்டத்தை நீடிக்கும் நிர்மாணவேலை பிபில பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தியிருந்தது. இதற்காக மி.மீ. 63, 40 மற்றும் 32 அளவிலான 456 PVC நீர்க் குழாய்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 494,340 தொகை செலவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்திருந்த அந்த நீர்குழாய்கள் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தியிருக்காததுடன் தனியார் வீடொன்றின் பின்பகுதியில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணவேலை நிறைவேற்றப்படாமையால் அதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேறியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2016 ஆண்டிற்கான பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாகல சுகாதார நிலையத்திற்கு அண்மையிலள்ள பொதுக் காணியில் சனசமூக நிலையத்தின் மீதியான வேலைக்காக பிபில பிரதேச செயலகத்தினால் ரூபா 198,915 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைக்கான பண்டங்கள் கொள்வனவு செய்து தன்னார்வ அமைப்பு ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. புதிதாக அறை ஒன்று நிர்மாணிப்பதற்காக அப் பண்டங்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அறையினை நிர்மாணிப்பதற்காக கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிப்பதற்காக கம்பிகள் மாத்திரம் போடப்பட்டிருந்தது. அதன் பின்னர் நிர்மாணவேலைகள் கைவிடப்பட்டுள்ளது.

(ஓ) பிரதேச மக்களின் நாளாந்த நீர்தேவையினை நிறைவேற்றுதல், சுகாதார பண்புகளுடைய நீர் வழங்கள் மற்றும் விவசாய விடயங்களுக்காக நீர் வழங்கல் பெற்றுக்கொடுத்தல் ஆகிய குறிக்கோளுடன் இலுக்கும்புர ரண்மினகம நீர்

செயற்திட்டத்தின் இலுக்கும்புர கிணற்றை நிர்மாணிப்பதற்காக மெதகம பிரதேச செயலகத்தினால் ரூபா 687,188 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றிற்கு நுழைவதற்கான பாதை காடுகள் வளர்ந்து காணப்பட்டது. சுகாதார பண்புகள் நிரம்பி நீர் வழங்கள் ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பது செயற்திட்டத்தின் ஒரு குறிக்கோளாக இருந்த போதிலும், கிணற்றின் நீர் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தக் கூடியதா என பரிசோதனை செய்து அறிக்கை ஒன்றும் பெற்றிருக்கவில்லை. அதே போல் கழிவுப் பொருட்கள் விழுவதனை தடுப்பதற்காக மூடி ஒன்று தயாரித்து பொருத்துவதற்கு செயற்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பிரதேசத்தை சேர்ந்த நலன்பெறுவோரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றின் மூலம் தமது நீர் தேவையினை பெற்றுக்கொள்வதில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஔ) கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் கதிர்காமம் கெஸ்டுபான கால்வாயை கொங்கிரீட் பண்ணும் செயற்திட்டத்தின் சீர்படுத்தும் பலகை போடுவதற்காக ரூபா 317,255 தொகை செலவிடப்பட்டிருந்ததும் பயன்படுத்தப்பட்டிருந்த வடிவமைக்கப்பட்ட பலகைகளின் பலவீனமாக செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(க) மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் தனமல்வில, கதிர்காமம், செவனகல, சியம்பலாண்டுவ, மெதகம, பிபில, படல்கும்புர மற்றும் வெல்லவாய ஆகிய பிரதேச செயலகங்களினால் செயற்படுத்தியிருந்த 120 பாதை செயற்திட்டங்களுக்காக ரூபா 4.72 மில்லியன் தொகையும், 27 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 1.17 மில்லியன் தொகையும் மற்றும் விளையாட்டு திடல் ஒன்றில் மண் அகற்றி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 0.19 மில்லியன் ஆக கூட்டுத்தொகை ரூபா 6.08 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 இழப்புக்களும் சேதங்களும்

---------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தினால் சியமலாண்டுவ உதவிப் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக முதல் தடவையாக விலைகூறல் அழைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 6.16 மில்லியன்களில் விலைகூறல் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரருக்கு நிர்மாணவேலைகயை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பெறுகைகள் குழுவினால் அதற்காக மீண்டும் ஒருமுறை திறந்த விலைகூறல் அழைப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 6.31 மில்லியனிற்கான விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இரண்டாவது முறை விலைகூறல் அழைத்து தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 154,084 தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தை சேர்ந்த 39 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை பெறுமதி மதிப்பீடு செய்து புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து பெற்றிருந்தது. அந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2010 ஆண்டு தொடர்பாக பெற்றிருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தமையினால் 2016 ஆண்டு முதல் 2018 மார்ச் மாதம் வரையான காலப்பகுததி தொடர்பாக ரூபா 1.14 மில்லியன் வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிபில பிரதேச செயலகத்தினால் 2010 ஆண்டு முதல் 2014 ஜனவரி மாதம் முதல் கணக்காளர் வீட்டில் வசித்திருந்த கணக்காளரின் வசித்த காலத்திற்கான வாடகை அறவீடு செய்யும் போது ரூபா 117,634 இற்கான வாடகை தொகை ஒன்று குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அந்த நிலுவை வாடகையை 2017 திசெம்பர் 08 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதியக் கொடுப்பனவின் போது வெல்லவாய, சியம்பலாண்டுவ, தனமல்வில, செவனகல மற்றும் மொனறாகலை பிரதேச செயலகங்களினால் 37 ஓய்வூதியம் பெற்றோருக்கு ரூபா 6.04 மில்லியன் தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2016 ஜனவரி 12 திகதிய 1/2016 ஆம் இலக்க சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கையின் 2.4 பந்தியின் பிரகாரம் இடையறாமல் 03 மாதங்கள் நலன்களை பெற்றுக்கொள்ளாத நலன்பெறுவோரின் பெயர்களை பரிசோதனை செய்து பதிவேட்டில் இருந்து அகற்றப்பட வேண்டும் எனினும், அவ்வாறு செய்யாமல் 04 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரை முதியோர் படி பெற்றிருக்காத நலன்பெறுவோரின் பெயர்களை பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக 10 பிரதேச செயலகங்களில் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான முதியோர் படி பெற்றுக்கொள்ளாத கூட்டுத்தொகை ரூபா 7.65 மில்லியன் தொகை உரிய செலவு விடயங்களுக்கு மிகைவிதிப்பு செய்யப்பட்டிருந்தது.

## 2.10 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள், பயன்படுத்துதல் மற்றும் சேமிப்பு தொடர்பாக தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக மீதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 325.3 | 324.5 | 0.8 | 0.2 |
| | மூலதன | 190.5 | 190.5 | - | - |
| | **மொத்தம்** | **515.8** | **515.0** | **0.8** | **0.2** |
| 2014 | மீண்டுவரும் | 340.8 | 340.4 | 0.4 | 0.1 |
| | மூலதன | 390.7 | 386.2 | 4.5 | 1.1 |
| | **மொத்தம்** | **731.5** | **726.6** | **4.9** | **1.1** |
| 2015 | மீண்டுவரும் | 429.5 | 429.3 | 0.2 | 0.04 |
| | மூலதன | 53.7 | 45.1 | 8.6 | 19.0 |
| | **மொத்தம்** | **483.2** | **474.4** | **8.8** | **19.04** |
| 2016 | மீண்டுவரும் | 464.0 | 458.7 | 5.3 | 1.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதன | 120.0 | 118.5 | 1.5 | 1.2 |
| | **மொத்தம்** | **584.0** | **577.2** | **6.8** | **2.3** |
| 2017 | மீண்டுவரும் | 462.0 | 457.8 | 4.8 | 1.0 |
| | மூலதன | 118.0 | 93.2 | 24.8 | 21.0 |
| | **மொத்தம்** | **580.6** | **551.0** | **29.6** | **5.1** |

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த பயன்படுத்தல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டிடங்கள் மற்றும் நிர்மாணவேலைகள் செலவு விடயத்துடன் உரித்தில்லாத ரூபா 378.225 இற்கான செலவுகள் உட்பட்டிருந்தமையால் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணவேலை செலவு விடயத்தின் செலவுகள் மற்றும் அச்சொத்துக்கள் ரூபா 378.225 தொகை வீதம் மிகையாக ஒதுக்கீட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

**ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடுகள்**

28 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்களினால் பல்வேறு கருமங்களுக்காக முறையே கூட்டுத்தொகை ரூபா 2,364 மில்லியன் மற்றும் ரூபா 108 மில்லியன் தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 2,472 மில்லியன் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 1,818 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 654 மில்லியன் தொகை எனப்படும் 26 சதவீதம் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27701 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 37.00 | 36.70 | 32.00 | 33.43 | 125.00 | 94.18 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 11 உத்தியோகத்தர்களின் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை, இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 2.42 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவைக் கடன் மீதிகள் 01 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அம் மீதிகளை அறவீடு செய்திருக்கவில்லை.

**2.12 பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் 05 பொது வைப்புக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 92.9 தொகையாக இருந்தது. இந்த மீதியில் அடங்கியுள்ள மாவட்ட செயலகம் மற்றும் மடுள்ள பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 19.92 மில்லியனுக்கான 121 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**2.13 இணக்கமின்மைகள்**

**2.13.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 215(3)(இ) | 492,522 | மடுள்ள பிரதேச செயலகத்தினால் திறைசேரியின் அங்கீகாரமின்றி 2016 ஆண்டின் போது கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நாகஹமட நீலவபெத்த பாதையை அபிவிருத்தி செய்வதற்கான பணத்தை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. |

(ஆ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| 2015 திசெம்பர் 29 ஆம் திகதிகள் 02/2015 ஆம் இலக்கம் கொண்ட சுற்றாடல் சுற்றறிக்கையின் பந்தி 2.III | - | மாவட்ட செயலாளர் மற்றும் ஏனைய உரிய தரப்பினர் பங்குபற்றும் குழுஒன்றின் விதப்புரை இன்றி தோண்டுதல் மற்றும் எடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் புத்தளை பிரதேச செயலகத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்த ப்பட்டிருந்த 24 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக மண்/ சரளை 2331 கியுப்கள் தோண்டப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. |

### 2.13.2 வரித் தேவைகளுக்கு இணக்கமின்மை

வெல்லவாய பிரதேச செயலகத்தினால் 2013 ஆண்டு முதல் பதிவு செய்தல் வழுவிழந்திருந்த வரி செலுத்துவோர் ஒருவருக்கு 2016 ஆண்டின் போது ரூபா 806,053 இற்கான பெறுமதி கூட்டியவரி செலுத்தப்பட்டிருந்தது.

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்கூறிய 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான மாவட்ட செயலகத்தினால் ஆளணி வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 385 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 32 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 05 | 18 |
| (iii) | இரண்டாம் நிலை | 814 | 636 | 178 |
| (iv) | ஆரம்ப நிலை | 113 | 103 | 10 |
| | மொத்தம் | 991 | 776 | 215 |